
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1169

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

52

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

# சூழ்ச்சிகளை வென்ற ‘செம்மொழி’!

## நூற்றாண்டுக் கனவை நிறைவேற்றிய கலைஞர்

2004-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 7-ஆம் தேதி, நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் உரையாற்றிய அன்றைய குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம், “தமிழ் செம்மொழியாகப் பிரகடனப்படுத்தப்படும்” என்று குறிப்பிட்டார். அதைத் தொடர்ந்து, 2004-ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம் 12-ஆம் தேதி, ‘செம்மொழி அறிவிப்பை வெளியிட்டது ஒன்றிய அரசு. அந்த அறிவிப்பு, உலகெங்கிலும் வாழும் தமிழர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. தமிழறிஞர்கள், ஆர்வலர்கள், கலைஞரைக் கொண்டாடினர். அப்போதுதான், ‘நான் ஒரு கருவி, இந்தக் கருவியைத்தான் தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொண்டனர்; தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் புலவர்கள் பயன்படுத்திக் கொண்டனர்’ எனக் குறிப்பிட்டார் கலைஞர்.

ஒரு மொழி வளர வேண்டுமெனில், அரசும் அரசின் ஆதிக்கமும், அந்த அரசை நடத்துகிறவர்களின் ஆதரவும் தேவை. ஒன்றிய அரசுதான் செம்மொழித் தகுதி வழங்க முடியும் என்கிற நிலையில், ஒன்றிய அரசில் கழகம் கொண்டிருந்த செல்வாக்கின் காரணமாக, செம்மொழித் தகுதியைப் பெற்றுவந்தோம். ஆனால், அன்றைக்கு அம்மையார் ஆட்சியில், மாநில அரசின் ஒத்துழைப்பும் ஆதரவும் இல்லாமல் இருந்தது.

அதைப் பொருட்டாகவே எடுக்கவில்லை. ஆய்வு மையங்கள், நிதி உதவி, கல்வி வாய்ப்புகள் ஆகியவற்றை உருவாக்குவதற்கு, எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மாநில அரசின் சார்பில், எந்தக் கோரிக்கையும் வைக்கப்படவில்லை என்பதால், கர்நாடக மாநிலம், மைசூரில் உள்ள மத்திய செம்மொழி ஆராய்ச்சி நிறுவனத்தின்கீழ் ஒரு துறையாகச் செயல்படத் தொடங்கியது, ‘தமிழ் செம்மொழி’.

2006-ஆம் ஆண்டில், கழகத்தின் ஆட்சி அமைந்ததும், ‘தமிழ் செம்மொழி’ ஆராய்ச்சிகள் தனித்தன்மையுடன் இயங்க வேண்டும் என ‘செம்மொழித் தமிழாய்வுக்கு எனத் தனியாக மத்திய நிறுவனத்தை அமைப்பதற்கு, வலியுறுத்தினார் கலைஞர். அந்த நிறுவனத்தை, தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என்றும் உறுதியாக இருந்தார். 2007-ஆம் ஆண்டில், அந்த நிறுவனம் உருவாக்கப்பட்டு, சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள பொதுப்பணித் துறையின் பாலாறு இல்லத்தில், 2008-ஆம் ஆண்டு, ஜூன் 30 ஆம் தேதி, தொடங்கி வைக்கப்பட்டது.

### 150 ஆண்டுக் கனவு

அந்த நிகழ்ச்சியில் பேசிய கலைஞர், “செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் தமிழகத்தில் காலூன்றுகின்ற இந்த நாள், பரிதிமாற்கலைஞர் 150 ஆண்டுகளுக்கு முன்பு கண்ட கனவு. அந்தக் கனவு நனவாக வேண்டுமென்று 50 ஆண்டுகளுக்கு முன்பே நான் கொண்ட நினைவு, இன்று செயலாக்கம் பெறுகின்றது” என்று பெருமிதத்துடன் கூறினார்.

அத்துடன் அவர் பணி நிறைவடையவில்லை. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்காக சென்னை, பெரும்பாக்கத்தில் 17 ஏக்கர் நிலம் ஒதுக்கி, அந்த நிலத்தை அரசின் சார்பில் சீரமைத்தும் கொடுத்தார்.

அரசின் ஒத்துழைப்பு தவிர, தன் சொந்தப் பணத்தில் ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, ‘கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி அறக்கட்டளை’ ஒன்றை நிறுவினார். அந்த அறக்கட்டளையின் சார்பில், சிறந்த தமிழறிஞர்களைத் தேர்வுசெய்து, அவர்களுக்கு ‘செம்மொழித் தமிழ் விருதுகள்’ பொற்கிழியுடன் அளிக்க வகை செய்தார்.

அதே காலகட்டத்தில், சென்னையில் தனியாரிடமிருந்து மீட்ட அரசு நிலத்தில் பூங்கா உருவாக்கி, அதற்கு ‘செம்மொழிப் பூங்கா’ எனப் பெயரிட்டதுடன், 2010-ஆம் ஆண்டில், உலகத் தமிழறிஞர்களைத் திரட்டி, கோவையில் ‘செம்மொழி மாநாடு’ நடத்தினார். தமிழ்நாடு முழுவதும் பண்பாட்டு விழாவாக, அந்த மாநாடு கொண்டாடப்பட்டது.




### முடங்கிய செம்மொழி நிறுவனம்

செம்மொழித் தகுதிக்கான நூற்றாண்டு தாண்டிய போராட்டம் வெற்றிபெற்று, மொழி ஆராய்ச்சியை நிறுவனமாக்கிய நிலையில், 2011-இல் நிகழ்ந்த ஆட்சி மாற்றம், மீண்டும் கழகத்துக்குப் புதிய போராட்டத்தைக் கொண்டுவந்தது.

தமிழாராய்ச்சிப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டுக்கொண்டிருந்த ‘செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்’, 2011-ஆம் ஆண்டில், அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் முடக்கப்பட்டது. மைசூரில் ஒரு துறையாகச் செயல்பட்டுக்கொண்டிருந்த செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தை சென்னைக்குக் கொண்டுவந்து, தன்னாட்சி நிறுவனமாகச் செயல்பட வைத்த நிலையில், 2017-ஆம் ஆண்டில், செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தை திருவாரூரில் அமைந்துள்ள மத்தியப் பல்கலைக்கழகத்தின் ஒரு துறையாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. கழகத்தின் கடும் எதிர்ப்புகளால், அப்போது அந்த முயற்சி கைவிடப்பட்டது.

### செம்மொழி அரசியல் குழப்பங்கள்

இதற்கிடையே, 2004-ஆம் ஆண்டில், செம்மொழிக்கான வரையறைகள் அறிவிக்கப்பட்ட போது, தொன்மை, இலக்கியச்செழிப்பு, தனித்துவம் ஆகியவை உறுதியான அளவுகோல்களாக இருக்க வேண்டும் என்ற வாதம் வைக்கப்பட்டது. உணர்ச்சி சார்ந்ததாக அல்லாமல், மொழியின் அறிவியல் மதிப்பீட்டில் இருந்தும் தொன்மை அளவிடப்பட்டது. ஆனால், காலப்போக்கில் அந்த அளவுகோல்கள் தளர்த்தப்பட்டு, புதிய மொழிகள் செம்மொழி வரிசையில் சேர்க்கப்பட்டன.

குறிப்பாக தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஒடியா ஆகியவற்றை செம்மொழியாக்கிய நிலையில், 2024-ஆம் ஆண்டில் மராத்தி, பாலி, பிராகிருதம், அஸ்ஸாமி, பெங்காலி என மேலும் ஐந்து மொழிகளுக்கு, செம்மொழித் தகுதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில், ‘மொழி தொடர்பான தீர்மானம் அரசின் கொள்கை முடிவு. நீதிமன்றம் அதில் தலையிட முடியாது’ என்றது. அதன்மூலம், செம்மொழித் தகுதி என்பது நிர்வாகரீதியான ஒப்புதலாக, அரசியல் நிலைப்பாடுகளுக்கு ஏற்ப கையாளப்படும் ஒன்றாக மாற்றி வைத்துள்ளது, ஒன்றிய பா.ஜ.க. அரசு.

> **கழகமும் கலைஞரும் போராடி வென்ற உரிமை, செம்மொழித் தகுதியும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும்.**

இப்படியான நிலையில்தான், 2020-ஆம் ஆண்டில், ‘இந்திய மொழிகளின் ஆய்வு நிறுவனத்தை ‘பாரதிய பாஷா விஷ்வ வித்யாலயா’ எனப் பெயர் மாற்றிய ஒன்றிய அரசு, அந்த நிறுவனத்துடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தை இணைக்க முயற்சி செய்தது. அப்போதும் அதே உறுதியுடன் கழகத்தின் எதிர்ப்பு இருந்தது. இப்போதும் நிர்வாக ரீதியாக ஒன்றிய அரசின் ஆதிக்கம், செம்மொழி மத்திய நிறுவனத்தை அதன் இலக்கில் முழுமையாகச் செயல்பட விடாமல் தடுத்து வைத்துள்ளது.

ஆனால், நூற்றாண்டு இலக்கை அரசியல் சூழ்ச்சிகளைத் தாண்டி நிறைவேற்றியவர் கலைஞர்.

“ஆட்சியிலே இருந்தாலும் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும், திராவிட முன்னேற்றக் கழகம், தான் ஏற்றுக்கொண்ட இலட்சியங்களுக்காக என்றென்றும் குரல் கொடுத்துக் கொண்டே இருக்கும் என்பதற்கு, கழக வரலாற்றில் எண்ணற்ற சான்று ஆவணங்கள் இருக்கின்றன. தமிழைச் செம்மொழியாக அறிவித்திட வேண்டுமென்பது கழகத்தின் இலட்சியம். அந்த இலட்சியத்தை நிறைவேற்றிட ஆட்சியில் இருந்தபோது மேற்கொண்ட முயற்சிகளின் தொடர்ச்சியாக, எதிர்க்கட்சியாக இருந்தபோதும் கழகம் தொய்வில்லாமல் நடவடிக்கைகளை மேற்கொண்டது” என்று ‘செம்மொழிச் செப்பேடுகள்’ கடிதத்தில் குறிப்பிட்டிருப்பார் கலைஞர். கழகமும் கலைஞரும் போராடி வென்ற உரிமை, செம்மொழித் தகுதியும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும்.

...தொடரும்

## தாலிக்குத் தங்கம் திட்டத்தை நிறுத்தியது அ.தி.மு.க!

பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கும் விதமாக, 8-ஆம் வகுப்பு வரை படித்த ஏழைப் பெண்களுக்கு, திருமண நிதி உதவியாக ரூ.5,000 வழங்கும் திட்டத்தை, 1990-ஆம் ஆண்டில், முத்தமிழறிஞர் கலைஞர் தொடங்கினார். பின்னர், ஆட்சிக்கு வந்தபோதெல்லாம் இத்திட்டத்தை விரிவுபடுத்தி, 10-ஆம் வகுப்பு வரை படித்தால் ரூ.20,000 என 2010-ஆம் ஆண்டு உயர்த்தினார். இத்திட்டத்தின் நோக்கம் திருமண நிதி உதவி அல்ல, அவர்களைப் படிக்க வைப்பதுதான் என்பதுகூட புரியாமல், அடுத்து வந்த அ.தி.மு.க. அரசு, இதை ‘தாலிக்குத் தங்கம்’ என மாற்றியது.

இந்நிலையில், 2021-ஆம் ஆண்டு, திராவிட மாடல் அரசு அமைந்த பின்னர், அரசுப் பள்ளியில் படித்து உயர் கல்விக்குச் செல்லும் பெண்களுக்குப் ‘புதுமைப்பெண்’ திட்டத்தின் வாயிலாக மாதந்தோறும் 1,000 ரூபாய் வழங்கிவருகிறது. இளம்பெண்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ள இத்திட்டம், 2.0 ஆட்சியில் 1,500 ரூபாயாக உயர்த்தப்படும் என்று முதலமைச்சர் வாக்குறுதி கொடுத்துள்ளார். இதைக் கண்டு எரிச்சலடைந்த எதிர்க்கட்சியினர், தேர்தல் பரப்புரையில் அ.தி.மு.க. கொண்டுவந்த ‘தாலிக்குத் தங்கம்’ திட்டத்தை நிறுத்திவிட்டார்கள் என மக்களிடையே பரிதாபம் தேட முயல்கின்றனர்.

இதில் கடுகளவும் உண்மையில்லை என்பதை அம்பலப்படுத்தியுள்ளது, ‘யூ டர்ன்’ உண்மை சரிபார்ப்பு ஊடகம். ‘2011-ஆம் ஆண்டு, ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது கொண்டுவரப்பட்ட ‘தாலிக்குத் தங்கம்’ என்ற திட்டத்தை தி.மு.க. அரசு நிறுத்தி வைத்ததாகத் தவறான தகவல் பரப்பப்படுகிறது. இந்தத் திட்டம் அ.தி.மு.க. ஆட்சியில், 2018-19 ஆம் ஆண்டிலேயே நிறுத்தப்பட்டுவிட்டது. எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, சட்டமன்றத்தில் இது குறித்துப் பேசும்போது, “டெண்டர் வாயிலாகவே இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. தங்கம் விலை ஏற்றம், இறக்கம் காரணமாக யாரும் டெண்டர் எடுக்க முன்வரவில்லை. மேலும், கொரோனா காலம் என்பதால், இரண்டு ஆண்டுகளாக எந்தப் பணியும் நடக்கவில்லை. இதனால்தான் நிறுத்தப்பட்டது” என்று கூறினார்.

நிலுவையிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும், இத்திட்டத்தின் கீழ் தங்கம் வழங்குவதற்காக, 2023-ஆம் ஆண்டு, 117.18 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது’ எனத் தெளிவுபடுத்தியுள்ளது, யூ டர்ன்.

## ஃப்ளாஷ்பேக்


பி.சந்திரசேகரன்



### முத்தமிழறிஞர் சிலை திறப்பு விழா!

2018-ஆம் ஆண்டு, டிசம்பர் 16-ஆம் தேதி, அண்ணா அறிவாலய வளாகத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழாவில், கலந்துகொள்வதற்காகப் பத்து நாட்கள் முன்னதாக சிங்கப்பூரிலிருந்து குடும்பத்துடன் சென்னை வந்தோம். டிசம்பர் 8-ஆம் தேதி அன்று, கழகத் தலைவர் தளபதி அவர்களைச் சந்திக்க, அண்ணா அறிவாலயத்துக்குச் சென்றிருந்தோம். என் மகன், அவருக்கு ‘சிறிய அன்பளிப்பு’ என, தான் எடுத்துச்சென்றதைக் கொடுத்தபோது, உளப்பூர்வமாக மகிழ்ந்தார். சைதாப்பேட்டை இடைத்தேர்தலின்போது, எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அவரிடம் கூறியபோது, அறையில் இருந்த அனைவரும் சிரித்தனர். ‘தடா’ எதிர்ப்புப் பேரணியில், நான் துப்பாக்கிச்சூட்டில் இருந்து தப்பியது எனப் பல நினைவுகளைத் தலைவரிடம் பகிர்ந்துகொண்டு கிளம்பினோம். நூற்றுக்கணக்கான தொண்டர்களுக்கு மத்தியில் நாங்கள் வெளியே வரும்போது, மகிழ்ச்சியில் மிதப்பதுபோல உணர்ந்தோம். உலகத்தில் எந்த மூலையில் இருந்தாலும், கழகத்தின் கடைக்கோடித் தொண்டர்களில் ஒருவனாகத் தொடர அந்த உணர்வு போதும்.

**- பி.சந்திரசேகரன், துணை அமைப்பாளர்,**
**தி.மு.க. அயலக அணி, சிங்கப்பூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன்
எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### பொதுமக்கள் உள்ளத்திலே மகிழ்ச்சி!

1967-ஆம் ஆண்டு, கழகத்தின் தேர்தல் அறிக்கை, மக்கள் மனத்தைப் படம்பிடித்துக் காட்டியது. ‘அறநெறி அரசியலுக்காகவும் பேதமற்ற சமுதாய அமைப்புக்காகவும், சமதர்மத்துக்காகவும் பாடுபடும் உறுதிகொண்ட தி.மு.கழகம், தனது ஜனநாயகக் கடமையைச் செவ்வனே செய்திருக்கிறது என்பது, பொதுமக்கள் உள்ளத்தில் ஒரு திருப்தியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தியிருக்கிறது என்பதைக் கழகம் உணர்கிறது’ என்றது. இன்றும் மக்கள் அந்த உணர்விலே உள்ளனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900